Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

ஈழகேசரி

(கல்வி அநுபந்தம்)

“கற்பவை கற்றுக் கற்றாங் கொழுக”

புத்தகம் 2 } சுன்னாகம்: பிரமாதி௵ வைகாசி௴ உகஉ (4-6-39) { இல. 31

மாலைப் பொழுது

(கோட்டாறு, தே. ப. பெருமாள்)

1. பாலை வெய்ய பூமியினில்
பருகும் நீரின் வேட்கையினால்
நாலு திசையும் சுற்றிமகன்
நல்ல ஊற்றைக் கண்டதுபோல்
வேலை யொத்த வெங்கதிரால்
வெந்த உயிர்கள் பொழுதோட்டி
மாலைப் பொழுதைக் கண்டனவே
மட்டி லின்பங் கொண்டனவே!

2. நிலவு சிதறு மழகோடு
நிகரில் காலைக் காட்சியையும்
உலவுங் கதிரோ னென்றாக்கி
உயர்ந்த மாலைக் கீந்தானோ?
பலவும் விட்டே வையத்தை
பகராத் துன்ப மென்போரின்
நிலவு போக்க இறையோனும்
நல்கும் வான அமுதமிதோ?

3. இறையோ னின்ப உருவினையே
இனிய உலக மக்களெலாம்
முறையில் கண்டு மகிழ்ந்திடவே
முருகா மிதுவும் வந்ததுவோ?
பறையர் பள்ளர் மேலோர்க்கும்
படியுங் காட்சி ஒன்றென்னும்
இறையின் பொதுவைக் காட்டிடவே
இயங்கி வந்த ஓவியமோ?

4. சின்னஞ் சிறிய பிள்ளையர்பால்
சுடரோன் வெம்மை வீசியதால்
பின்ன ரவருந் தம்மியல்பைப்
பேசுங் கவிக ளாகிடுவார்
உன்னித் தமது வெம்மையினை
உணரா வியஞ்செய் திடுவரென
மன்னு முணர்வா லன்னோர்க்கிம்
மாண்பைப் பகலோ னீந்தானோ?

5. பொன்னில் திகழும் கதிரோனின்
போற்று மழகைப் பெற்றேதான்
சின்னக் கூட்டி லமைவுற்று
சிறக்கும் பறவை நிலையினையே
உன்னி உன்னி உணருங்கால்
உயர்ந்த கவிகள் கற்பனையில்
மன்னி யிருக்கும் காட்சியதின்
மாசில் நினைவைத் தந்திடுமே!

6. மாலைப் பூக்கள் மலர்ந்திடவே
மதுவை வண்டு மாந்திடவும்
கோலச் சாய்வில் வெறியுண்டு
குயிலின் னிசைகள் பாடிடவும்
மேலே பறக்கும் கிள்ளையினம்
விரும்பு மொலியைத் தந்திடவும்
சோலை அழகுச் செக்கரொடு
துலங்க லிதுவை செய்திடுமே!

7. மேவும் மாலைக் கதிரோனின்
மேன்மை யரங்கங் கண்ணுற்றே
காவை நோக்கிக் கடிதுவரும்
கவினார் பறவை இனமெல்லாம்
தேவர் வீசி விளையாடும்
தெய்வ அழகுத் தேன்மலர்கள்
பூவை நோக்கிச் சாய்வனபோல்
பொலியும் தோற்றம் தருவனவே!

8. பெற்ற நாட்டின் உரிமையினை
பெற்றே உவக்கும் வீரர்கள்போல்
முற்றும் மகிழ்வால் ஓடிவரும்
முறையே திரும்பும் ஆனிரைகள்
சுற்றி இருக்கும் பறவையெலாம்
சுடரோன் செய்யுங் கூத்தென்றே
தெற்றி யெண்ண மணியார்த்து
தெய்வச் செருக்கைத் தெரித்திடுமே!

9. தென்ற லெனுஞ் சிறுகன்னி
திறந்த மலரின் தொகையெண்ணி
மன்றல் வீசும் மகரந்த
மதனில் நன்கு தோய்வுற்று
குன்றி நலிந்த உயிரெல்லாம்
குறையில் காதல் கொண்டிடவே
ஒன்றி அணைந்து வருவாளே
உள்ளில் உவகை ஊட்டுவளே!

பாலர் தோட்டமும் பயிற்சி ஆசிரியரும்

[புலோலி, வித்துவான் திரு. க. முருகேசபிள்ளை
தமிழாசிரியன்]

(முற்றொடர்)

இனிப் பாலரைப் பயிற்றும் ஆசிரியரைப் பற்றி ஆராய்வோம். எப்போதும் மழலை மொழிப் புதல்வருடன் நகையாடல் சொல்லாடல் இன்பந்தருவனவாகும். பாலர் இருக்கும் சுற்றுடல் நலமுடையதாக இருக்க வேண்டும். தாய் தந்தையர் சகோதரர் உபாத்தியாயராதியோர் என்றும் செயல் பேச்சாதியவற்றில் தூய்மையுடையாராக இருக்கவேண்டும். பாலர் என்றும் அநுகார சக்திவாய்ந்தவர்கள். ஒருவர் செய்வது நடப்பதுபோன்று தாமும் அப்படியேயாகத் தெண்டிப்பவர். சிலபெற்றோர் அறிவிலிகளாதலின் அவர் சுற்றுடலிலுள்ள பிள்ளைகளும் மிகுதியும் மூடத்தனத்தில் பிரவேசித்துவிடுகின்றனர். அப்படியின்றிப் பாதுகாக்கப்பட வேண்டும். பாலர் வகுப்பை விவேகமாக நடத்தும் ஆசிரியரே சிறந்த ஆசிரியராவர். சிலர் பாலரைப் பயிற்றும் ஆசிரியரையும் பாலர்களரிமாண்பையும் உணராது 'இவர் என்ன அரிவரி வாத்தியார்தானே' என்று இகழவும் செய்கின்றனர். அப்படி இகழ்பவர் யாரெனில் பாலர் வகுப்பைப் பயிற்ற முடியாதாரே. தம்மால் முடியாவிட்டால் நரி திராட்சப்பழம் புளிக்கும் என்று சொன்னதுபோல் அதைக் குறைவாகவே சொல்ல ஆரம்பித்து விடுகிறார்கள். எப்போதும் பெரிய வகுப்புப் பிள்ளைகளை வழிகாட்டி நடக்கச் செய்யலாம். பாலர்மனமோ நிமிடந்தோறும் மாறும் இயல்புடையது வழிகாட்டி நடத்துவது மிகவும் சிரமமான காரியம். மேல்வகுப்புகளில் உத்தரவிட்டு விட்டு இருந்து சிரமபரிகாரம் தீர்ப்பதற்கும் பாலருடன் பொழுது போக்குவதற்கும் எத்தனையோ வகையில் வேற்றுமையுண்டு. பாலர் பயிற்சித் தோட்டத்திற்குப் பயிற்றப்பட்ட வசீகர தோற்றமுள்ள ஆசிரியரே சிறந்தவராவர். அகமலர்ச்சி, அதனாலுண்டாகும் முகமலர்ச்சி, அன்பு உடனுணர்ச்சி என்னும் நல்லில லட்சணங்கள் அமைந்திருக்க வேண்டும். ஆணாயினும் பெண்ணாயினும் இன்முகம்படைத்தவராக இருத்தல் நலம். பாலர்கள் இயல்பில் தங்களிடத்தில் அன்பு காட்டுபவர்களிடத்திலேயே அன்புடையராக இருப்பார்கள். அன்பாகப் பேசுவோர் இன்முகமாக இருப்போர் கூடி விளையாடுவோர் என்பவர்களுடனேயே பாலர்கள் இருக்க விரும்புவர். தங்களை அடிப்போர், கோரஉருவம் உள்ளவர்கள், என்றும் அறியாதவர்கள் ஆகியவர்களோடு கூடிவிளையாடவாகுதல் அவரின் முகத்தைப் பார்க்கவாகுதல் பாலர் விரும்படார். பாலர்களுக்கு இயல்பாகவே வீணை, தாளம், ஊதுகுழல், மணி ஆதியாம் ஒலிக்கருவிகளிலும் மிருதங்கம், ஆதியாம் வாத்தியங்களிலும் ஆடல் பாடல்களிலும் கண்கவர் வனப்பு வாய்ந்த படங்களிலும் ஆசை மிகுதியும் உண்டு. ஒன்றைக்கண்டு சந்தோசம் நேர்ந்தபின்னை மறுதொழில்களையும் எண்ணங்களையும் மறந்து நிற்கின்றது. இவ்வநுபவங்களைக் கொண்டு ஆசிரியர் தன் இலட்சணங்களை வகுத்தல் வேண்டும். பாலர் வகுப்பு ஆசிரியர் பாடவும், வாத்தியம் வாசிக்கவும் சித்திரம் வரையவும் கதை சொல்லவும் அன்பொழுகப் பேசவும் வல்லவராக இருத்தல் வேண்டும். அவர் பிள்ளைகளுக்கு ஏற்ற செய்யுள், கொடியாதியன நன்கு பயின்றிருத்தல் வேண்டும். பாலமாணவப் பிள்ளைகளின் தன்மை மனப்பான்மையைப் பற்றி நல்ல அறிவுடையராக இருக்கவேண்டும். பாலரின் சுபாபத்தை நேரே கண்டு அறிந்த அறிவு, மனோதத்துவ சரீரதத்துவ அறிவு நிரம்பியவராக இருத்தல் வேண்டும். தாவர வர்க்க சீவவர்க்க அறிவுடையராகவும், சாதாரண கைத்தொழில்கள் எல்லாந் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும். விளையாட்டுப் பொருள் செய்வதில் மிகவும் தேர்வு உள்ளவராய் இருத்தல் நலம். இன்புறப்பேசல், பாடல் சித்திரம் வரைதல் முதலியவற்றில் வல்ல ஆசிரியனே பாலர் வகுப்பில் விசேடமான வேலைசெய்து பாலர்களின் கவனத்தை நாட்டப்படுத்துவான். பிரம்பு இங்கே அதிகம் உதவி செய்யாது. பண்டைக்காலம் பிரம்படி கொடுத்தல் மிகுதியும் உண்டு. ஆயின் இக்காலத்திலும் இல்லாமல் இல்லை. பாலர் வகுப்பு உபாத்தியாயர் சமயோசித புத்தியின் மெத்தியவராக இருக்கவேண்டும்.

சில வித்தியாசாலைகளில் இக்காலத்திலும் பயிற்றப்படாத ஆசிரியர்களை பாலர்வகுப்பு ஆசிரியராக நியமனம் பெற்று பாலர் மாண்பைப் பாழ்படுத்துகிறார்கள். பாலரைப் பயிற்றும் ஆசிரிய இலக்கணம் ஒன்றும் இல்லாத பத்திர உபாத்தியாயரை நியமிக்கிறார்கள். அறிவுடைய முகாமையாளர் இருப்பின் இப்படி நிகழுமா? பாலர் வகுப்புக்குப் பெண் உபாத்தியாயர்தான் தகுதியென்று பறை அடிப்பவரும் சிலருண்டு. ஆயின் தகுதி யமைந்தால் ஆணும் சரிதான் பெண்ணும் சரிதான்.

பாலர் தோட்டத்தில் பயில்வுறுவோர் பரீட்சையை இலக்காக வைக்கக் கூடாது. பாலரின் மனோவிருத்தியைத் தான் பெரிதும் கருதவேண்டும். பாலர் மனதை விருத்திசெய்ய ஏற்பட்ட இடத்தில் அதிகாரிகள் மனதைத் திருப்தி செய்தால் போதுமென்று எண்ணும் எண்ணமே கூத்தாடுகின்றது. பாலர் மனம் விருத்தியடையின் அதிகாரிகள் தாமே திருப்தியுறுவர்.

தற்காலத்தில் பயிற்சிபெற்ற உபாத்தியாயர்களிற் பலர் பாலர் வகுப்பைக் கண்டு கசப்படைகின்றனர். காரணம் தெரியவேண்டியதவசியம். ஆசிரியலட்சணத்தையும் சாஸ்திர விரிவையும் செவ்வனே உணர்ந்து பாலரைப்பயிற்றி மேன்மையடைய எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

ஆங்கார மென்னுமத யானைவா யிற்கரும்பாய், ஏங்காமல் எந்தையருள் எய்துநாள் எந்நாளோ.

விஜயனின் வீரம்

(க. சுப்பிரமணியம், தென்மயிலை).

சந்திரகாந்தன் ஓர் அரசன். அவன் தன் நாட்டினின்றும் மதிவண்ணன் என்னும் அரசனால் துரத்தப்பட்டான். சந்திரகாந்தனது நகர் மதிவண்ணன் கைவசமாயிற்று. நாட்டிலுள்ளோர் வாடினர். சுற்றத்தார் துடித்தனர். சேனைகள் அவனைத் தொடர்ந்தனர். மதிவண்ணன் சிம்மாசனத்தை ஏற்றான். அனேக கொடிய சட்டங்களை ஏற்படுத்தினான். நகர்ப்புறத்தே காவலாளர் காவல் புரிந்தனர்.

சந்திரகாந்தன் மனைவியுடன் மலையைச் சேர்ந்தான். சேனைகளும், சுற்றத்தாரும், சினேகிதர்களும் சந்திரகாந்தனைப் பின் தொடர்ந்தனர். எல்லோரும் ஓர் இருண்ட குகையை அடைந்தனர். சந்திரகாந்தன் ஏக்கமுற்றபடியே அசையாமல் நிற்கின்றான். ஆறுபோல் கண்ணீர் பாய்ந்தது. செந்தாமரை போன்ற அவனது முகத்தில் சந்தோஷமென்பதே சிறிதும் காணப்படவில்லை. இவற்றைப் பார்த்துநின்ற சேனைகளும் மற்றவர்களும் துக்கித்தனர். அந்நேரத்தில் விஜயன் என்பவன் அவர்கள் மத்தியினின்றும் வந்து மன்னவனைத் தொழுது நின்றான். 'உற்றவிடத்தில் உதவி புரிவதே உற்றநண்பனின் உதவியாகும். "நண்பனாகிய என்னால் உனக்கு ஆகக்கூடிய ஏதும் உளதோ" என வினவினான். அந்நேரத்தில் சந்திரகாந்தனது முகம் சந்திரன போல் பிரகாசித்தது. அவன் விஜயனை நோக்கி "நீ எனக்கு ஒரு உதவி புரியவேண்டும்" என்றான். விஜயன் மறுத்தற்கு உடன்படுபவனல்லன். அவன் மன்னவனை நோக்கித் தான் செய்யவேண்டியது என்னவென்று வினவினான். சந்திரகாந்தன் "நண்பனே! யான் எனது பிரசைகளின் உதவியால் எனது நாட்டைத் திரும்பப்பெற நிச்சயித்திருக்கிறேன். ஆதலால் நீ எனது முதல் மந்திரியிருக்குமிடத்தை அறிந்து யான் தரும் கடிதத்தை அவனிடம் சமர்ப்பித்து நாளை நடுஇராவில் நாட்டை முற்றிக்கையிட ஆயத்தஞ் செய்யும்படியும் சொல்லுவாய்" என்றான்.

விஜயன் உடனே புறப்பட்டான். நடுச்சாமம் பயங்கரமான இருள். ஒரு பக்கத்தே காட்டு மிருகங்களின் சப்தம். மறுபக்கத்தே ஆறுகள் மலையினின்றும் விழும் சப்தம். இவையாவும் அந்த வீரனாகிய விஜயனைப் பயப்படுத்தவில்லை. மலையினின்றும் இறங்கி நாட்டை நோக்கிச் செல்கின்றான். சிறிது நேரத்தில் நகர் வாயிலை அடைந்தான். காவலாளர்கள் உறங்குவதைக் கண்டான். உற்சாகத்துடன் உள்ளே சென்றான். மந்திரியைச் சந்தித்தான். மன்னவன் கொடுத்த கடிதத்தைக் கொடுத்தான். மந்திரி கடிதத்தை வாசித்தான். மறுநாள் நடுஇரவில் நாட்டை முற்றிக்கையிடச் சம்மதித்தான். விஜயன் இந்த நற்செய்தியுடன் மன்னவனிருப்பிடம் செல்லத் தொடங்கினான். நகர்ப்புற வாயிலை அடைந்தான். பாவம்! என் செய்வான். இரு காவலாளர்கள் விஜயனைக் கண்டனர். வாள்களை உருவினர். ஒருவர் விஜயன் கையில் இறுகப் பிடித்தான். மற்றவன் வாள் ஓங்கியவண்ணம் "எமது அரசனது பகைவனாகிய சந்திரகாந்தன் இருக்குமிடத்தைச் சொல்லு" என்றான். விஜயன் ஒன்றும் பேசவில்லை. உடனே சொல்லாவிட்டால் வாளுக்கு இரையாவாய் என்று பயமுறுத்தினர். தன் தேசத்திற்காக உயிர்விடச் சித்தங்கொண்ட விஜயன் தன் உயிர் போகினும் அரசனும் நாடுங் காப்பாற்றப்படவேண்டுமென்று யோசித்தான். என்னே! அவன் தேசபக்தி. காவலாளர்கள், விஜயனை மதிவண்ணன்முன் கொண்டு சென்றனர். மதிவண்ணனும் காவலாளர்கள் கேட்டவண்ணமே கேட்டான். விஜயன் "கொடுங்கோல் மன்னனே! உன் ஆயுள் கிட்டிவிட்டது. யான் இறந்தாலும் என் அரசன் இருக்குமிடம் சொல்லேன். அப்படிச் சொல்லுவேனாயின் யான் ஒரு தேசத் துரோகி ஆவேன். ஆகலால் மன்னனே யான் ஒருபோதும் அரசன் இருக்குமிடம் சொல்ல மனமொருப்படேன்" என்றான். மதிவண்ணன் கோபமடைந்து விஜயனைக் கொண்டுபோய் வெட்டும்படி உத்தரவிட்டான். என்செய்வான் விஜயன். அவன் தலைவிதி இப்படியாயது. தன் அரசன் மறுபடியும் அரசாளும் பாக்கியத்தைக் காணவியலாததையிட்டு மனம் வருந்தினான்.

காவலாளர்கள் விஜயனை வெட்டும்பொருட்டுக் கூட்டிச் சென்றனர். எப்படியெனினும் விஜயன் மரணத்திற்குப் பயப்பட்டானில்லை சந்திரகாந்தன் ஒருமுறை தோல்வியுற்றாலும் மறுமுறையாவது வெற்றியடைவான் என்று விஜயன் திடமாய் நம்பினான். சிறிது நேரத்திற்குள் விஜயன் ஆவி விண்ணுலகடைந்தது. சந்திரகாந்தன் விஜயன் திரும்பி வாராததையிட்டு மனம் வருந்தினான். உயிர்விட உத்தேசித்தான். விஜயன் மந்திரியைச் சந்திக்குமுன் இறந்திருப்பானோ அல்லது அவனைச் சந்தித்தபின்னர் இறந்திருப்பானோ என்று பலவாறாகச் சந்திரகாந்தன் எண்ணினான். விஜயன் காவலாளர் கையில் அகப்பட்டிருக்க வேண்டும். அல்லாவிடில் இதுவரை அவன் திரும்பியிருப்பான். என் கதி எப்படி ஆகினும் ஆகுக யான அவனைத் தேடிச் செலவதேமுறை என்று சொல்லி, மறுநாள் நடுஇராவில் தன் சேனைகளுடன் புறப்பட்டு முதல் மந்திரியைச் சந்தித்தான். நாட்டை முற்றிக்கையிட்டான். கடும் போர் நடந்தது. சிறிது நேரத்தில் மதிவண்ணன் கைதியானான். சந்திரகாந்தன் சிம்மாசனத்தை ஏற்றான். விஜயன் அடைந்த கதியை அறிந்தான். மதிவண்ணனைப் பழிக்குப்பழி வாங்கினான். சந்திரகாந்தன் விஜயனின் வீரத்தையும் தேசபக்தியையும் நினைத்து அவனைத் தெய்வமாக வணங்கினான். அவனது உருவம் கல்லில் செதுக்கப்பட்டு ஒரு ஆலயத்தில் வைக்கப்பட்டு அவனால் வணங்கப் பட்டு வந்தது. சனங்கள் சந்தோஷிக்குமாறு சந்திரகாந்தன் பல ஆண்டு பரிபாலனம் செய்தான். என்னே விஜயனின் வீரச்செயல்.

சித்தமெனும் பௌவத் திரைக்கடலில் வாழ்துரும்பாய், நித்தமலை யாதருளில் நிற்குநாள் எந்நாளோ.

மேழிச் செல்வம் கோழை படாது

[“ஈழகேசரி” இளைஞர்சங்கப் பேச்சுப்போட்டியில் இரண்டாவது பரிசு பெற்ற விஷயம்]

மூற்றத் துறந்த முழுஞானியாக இருந்தும் சிற்றறிவு மிக்க சிறுர்களாகிய எங்கள் மீது கொண்டபற்றினுல் இவ்வவைக்கு, தலைமை பூண்டிருக்கும் சுவாமி அவர்கட்கும், அன்பிற்குரிய பாட்டியின் சுகவீனத்தையும், தமது தள்ளாப்பிராயத்தையும் பொருட்படுத்தாது இங்குவந்து எங்கள் சங்கத்தை இவ்விதம் சிறப்பாக நடைபெறச்செய்யும் தாத்தாவுக்கும், கண்ணியம் வாய்ந்த பிரபுக்கும் மற்றும் இச்சபையில் வீற்றிருக்கும் எல்லோர்க்கும் எனது மனமார்ந்த வந்தனம் உரியதாகுக.

பெரியோர்களே! அறிவில் முதிர்ந்தவர்களாகிய நீங்கள் அறிவிற் குறைந்த பாலனுகிய யான் பேசும் விஷயங்களைக் குறித்து, சந்தோஷம் அடையாவிட்டாலும் எனது மழலைச்சொற்களைக் கேட்டு இன்பம் அடைவீர்களென்று நம்புகிறேன். யான் இப்பொழுது பேச எடுத்துக் கொண்ட விஷயம் “மேழிச் செல்வம் கோழை படாது” என்பது.

முற்காலத்திலேயேயிருந்த தமிழ்ப்புலவர்களுள் ஔவையார் மிக முதன்மை பெற்றவர். அவர் எங்களுக்கு பல நூல்களை இயற்றித்தந்திருக்கிருர். அவற்றுள் கொன்றை வேந்தனிலேயே யான் பேச எடுத்துக்கொண்ட இவ்விஷயம் கூறப்பட்டுள்ளது. மேழிச்செல்வம் கோழைபடாது என்பதன் பொருளை ஈண்டு ஆராய்வாம். மேழிச்செல்வம்—கலப்பையினுல் உழுது பயிர்செய்து பெறுகின்ற செல்வம், கோழைபடாது—ஒரு போதும் குறைவு அடையாது. சுருங்கக்கூறின் பயிர் இடுதலால் உண்டாகின்ற செல்வம் குறைவுபடாது என்னலாம்.

உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் வாழ்வதற்கு காற்று, சலம், உணவு முதலியன அவசியம் வேண்டியனவாய் இருக்கின்றன. அவற்றுள் காற்றும், சலமும் இயல்பாகவே கடவுளால் தரப்பட்டிருக்கின்றன. உணவினை நாங்கள் முயற்சி செய்தே பெறுதல் வேண்டும். கமத்தொழிலைச் செய்தே நாங்கள் உணவினைப் பெற வேண்டும். மற்றைய தொழில்களினுல் நாம் உணவினைப் பெறமுடியாது. பெரிய அரசாங்க உத்தியோகத்தர்களும், கமக்காரரின் பிரயோசனத்தையே எதிர்பார்த்திருக்கிருர்கள். திருவள்ளுவரும் தாம்பாடிய திருக்குறளில்,

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்”

என்று கூறியிருக்கின்றுர். கமத்தொழில் இன்றி உலகம் நடக்கமாட்டாது. கல்வி, வேள்வி, நீதி முதலிய யாவும் கமத்தொழில் காரணமாகவே சிறப்படைகின்றன. இக்கருத்துப்பற்றியே கல்விச்சக்கரவர்த்தியாகிய கம்பரும் தான் இயற்றிய ஏரேழுபது என்னும் நூலில்,

“அலகிலா மறைவிளங்கும் அந்தணரா குதிவிளங்கும்
பலகலையாம் தொகைவிளங்கும் பாவலர்தம் பாவிளங்கும்
மலர்குலாம் திருவிளங்கும் மழைவிளங்கும் மனுவிளங்கும்
உலகெலாம் ஒளிவிளங்கும் உழுவர்உழும் உழவாலே”

என்று பாடியிருக்கின்றுர். சிலர் உத்தியோகம் பார்த்தல் கமம் செய்வதிலும் விசேடமென்று நினைக்கிருர்கள், அது தவறுகும். முதல் மணித்தியாலத்தில் பெரிய உத்தியோகத்தராக இருந்தவர் அடுத்த மணித்தியாலத்தில் அந்த உத்தியோகத்தை இழந்துவிடக்கூடும். ஒரு உத்தியோகத்தர் தமது வேலைக்கு நேரம் பிந்திச்சென்றுல் மேல் உத்தியோகத்தரினுலே கண்டிக்கப்படுவார். ஆனுல் கமக்காரன் தான் தோட்டத்திற்கு போகவேண்டிய நேரத்திற்கு எவ்வளவு நேரம் பிந்திச்சென்றுலும் எவர்களும் கண்டிக்கமாட்டார்கள். ஒரு உத்தியோகத்தன் தனது வேலையில் ஏதாவது பிழையைச்செய்துவிட்டால் உடனே மேல் உத்தியோகத்தர்கள் அவனுக்குக் குற்றம் விதிப்பார்கள். ஆனுல் கமக்காரன் தனது தோட்ட வேலையிலே அதிக பிழைகளைச்செய்துவிட்டாலும் அதற்கு எவர்களும் குற்றம் விதிக்கமுடியாது. ஔவையாரும்,

“ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லைக் கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.”

என்று தமது நல்வழி என்னும் நூலில் பாடியிருக்கிருர்.

கமத்தொழிலை எவர்களும் இழிவானதென்று எண்ணக் கூடாது. அரசர்கள் செங்கோல் செலுத்துவதற்கும் கமத்தொழிலே காரணமாக இருக்கிறது. கம்பர் பெருமானும்,

“வெங்கோபக் கலி கடந்த வேளாளர் விளைவயலுள்
பைங்கோல முடிதிருந்தப் பார்வேந்தர் முடிதிருந்தும்
பொங்கோதைக் கடற்றுனைப் போர்வேந்தர் நடத்துபெரும்
செங்கோலை நடத்துங்கோல் ஏர்அடிக்கும் சிறுகோலே”

என்று பாடியிருக்கின்றுர். இவ்விதம் பாவலர்களாலும் காவலர்களாலும் போற்றப்படுகின்ற கமத்தொழில் எங்கள் இலங்கையிலே சிங்களராசாக்கள் ஆண்ட காலத்தில் இலங்கையில் அதிகமாகச்செய்யப்பட்டது. அதனுல் அக்காலத்தில் இலங்கையில் இருந்து பிற இடங்களுக்கு நெல் முதலிய தானியங்கள் அனுப்பப்பட்டன. சிங்களர் ஆட்சிக்குப்பின் அன்னியர் ஆட்சியாலேயே கமத்தொழில் வீழ்ச்சி அடைந்தது. அதனுல் வடமாகாணத்திலும்,

உந்து பிறப்பிறப்பை உற்றுவிடா தெந்தையருள், வந்து பிறக்க மனமிறப்ப தெந்நாளோ.

வடமத்தியமாகாணத்திலும் அதிகமான பாகம் காடாய்க் கிடக்கின்றது. தற்காலத்தில் பிறநாடுகளிலிருந்து நெல் முதலியன இங்கு இறக்குமதியாகின்றன. நாங்கள் இப்பொழுது எங்களுடைய சோற்றை உண்ணவில்லை. அன்னியருடைய சோற்றை உண்கிறோம். வெட்கம்! வெட்கம்!! ஒரு நாளா? அல்லது இருநாளா? ஒரு வருடமா? அல்லது இருவருடமா? அன்னியருடைய சோற்றை எதிர்பார்த்திருப்பது.

வன்னிக் கேகுங்கள்—உழுது
வயலை விதையுங்கள்—வன்
ஆனையிறவுக் கப்பா
லான பெருங்காட்டை வெட்டி
வானளாவிய வாழை பலாமா
வைத்திடுவீர் வயல் வித்திடுவீரே—வன்
வெள்ளிக் கட்டித் தங்க மெல்லாம்
மேல் நாட்டுக் கேகுதையோ
அள்ளிக் குடிக்க கஞ்சி யின்றி
ஐயயா சனங்கள் சாகுதையோ—வன்
பருத்திச் செய்கை விருத்திவேணும்
பஞ்சை நூலாய் நூற்கவேணும்
கருத்துடன் தறி நாட்டவேணும்
கையால் நெசவு செய்யவேணும்—வன்
மெய்யாக உங்களுக்கு
மேன்மையுட னெடுத்துச் சொல்வேன்
ஐயா! கைத்தொழிற் கமவிருத்தியை
யாதரியுங்க ளாரும் போற்றுங்கள்—வன்

நண்பர்களே எழுங்கள்! எழுங்கள்!! யாம் வன்னி முதலிய இடங்களுக்கு இன்றே செல்லுதல் வேண்டும். அங்கு கமத்தினை நன்றே செய்தல் வேண்டும். நம்வயிற்றுக்கு உண்வினைக்கொண்டே வருதல்வேண்டும். சபையோர்களே! யாம் இதுவரையும் ஆராய்ந்தவற்றால் சமத்தொழில் மிக மேலானதென்றும் அது இப்போது கீழ்நிலையில் இருக்கிறதென்றும் அதை விருத்தி செய்ய யாவரும் முயலவேண்டுமென்றும் விளங்குகின்றோம். சிறியோர் செய்த சிறு பிழையெல்லாம் பெரியோர் ஆயிற் பொறுப்பது கடனே என்ற திருவாக்குக்கிணங்க சிறியேன் ஏதாவது பிழைகளைச் செய்திருந்தால் மன்னித்துக்கொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டுகின்றேன். யாவர்க்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்திச் செல்கின்றேன்.

இ. அ. நடராசா (ச. எ. 236)
நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி

இறப்பு

இறப்பென்பது உடலோடு உறவு பூண்ட உயிரானது அவ்வுடலை விட்டுப் பிரிதல்.

இவ்விறப்பைக் குறித்து அஞ்சிக்கவலாத மக்கள் இல்லையென்பது பெரு வழக்கு. இவ்விறப்பானது குறுகுதல் புலப்பட்டவிடத்தே அஞ்சிக் கவலுதலும், புலப்படாதவிடத்தே செருக்குறுதலும் மீக்கட்கமைந்த தோரியல்பு. சிற்றின்பம் பெருகித் திருவிழந்து பிணி முழங்கும் காலத்திலே, இளஞ்செல்வர் தங்குற்றங் கருதித் துயருறுகின்றனர். மாணவருட் பலரும் ஆண்டெல்லாங் கல்வித் துறையிலே சிறிதுஞ் செல்லாராய் வேண்டியவாறு விளையாடிவிட்டுப் பரீட்சைக்குச் சென்று ஆங்கு வினவிய வினாக்களுக் கேற்க விடையறியாராய்த் துயருறுவர். பின் பரீட்சையின் முடிபுரையைக் கேட்டபின்னரே கல்வித்துறையுள் முயன்று வந்தார் போன்று நடித்துக் கண்ணீர் பெருக்குதல் வழக்கா றன்றோ?

வன்னெஞ்சு கொண்டு இழிதகவு செய்து வருந் தீயோரும், அறமும் அன்புந்துறந்த காமம் மிகுந்த கல்லாக்கழிமகாரும், அன்ன பிறரும், தத்தமக்கு அழிவு வரும்போதே ஆற்றொணா இன்னல் மேற்கொண்டு பெரிதும் இரங்குதல் கண்கூடு. அழிவு வருங்காலத்திலே துன்புறுதலையும், மக்கள் தமக்கியல்பாக்கிக் கொண்டுள்ளார். கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரும்

“இறப்பெனும் மெய்ம்மையை இம்மை யாவர்க்கும்
மறப்பெனு மனிதனின் மேற்கேறு மற்றுண்டோ?”

எனக்கூறியதனால் இறப்பை மறந்திருத்தலினும் பார்க்க மறவாதிருத்தலே நலமாம்.

சிறுவன் வயதினாற் பெரியனாகின்றான் இப் பெரியனாதலின்பொருள் யாது? சிறுபருவம் இறந்து பெரும் பருவம் பிறந்ததன்றோ இதன்பொருள். உலக நலன் கருதி உடலையழிப்பதே மக்கட் பிறவியானெய்தும் பயனாக இருக்கவும், அப்பயனுக்குக் காரணமாய இறப்பினுஞ் செம்மை செறிந்தது வேறுண்டோ? நன்னெறிக்கே இறப்பதுதான் நல்வாழ்வு; தீநெறிக்கோ வாழ்வதுதான் தீச்சாவு; இது கருதியன்றோ.

“சுதம் போற்கேடு மூளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது”

என்று தமிழ்மறையும் முழங்குகின்றது.

இறப்பினும் ஆக்கமில்லை; இறப்பினுங் காவலுமில்லை. இறப்பினுஞ் சிறந்ததோ ரறனுமில்லை; இறப்பினுஞ் சிறந்த அன்பும் அருளுமில்லை; இறப்பே ஆண்மை; இறப்பே மெய்ம்மை; இறப்பே மங்கலம்; இறப்பே ஞானம்; இறப்பே இம்மையும் மறுமையும் ஆகும்.

இருமையுங் காத்து நடுவிற்றிருந்தி வரும் இறப்பே நீ நீடூழி வாழ்க.

சீ. நடராசா (259)
J. S. C. மாணவன்
உடுவில் தெற்குச் சைவவித்தியாசாலை

புத்தியெனுந் துத்திப் பொறியரவின் வாய்த்தேரை, ஒத்துவிடா தெந்தையருள் ஓங்குநாள் எந்நாளோ.

தந்தைதாய் பேண்

[க. வேலாயுதபிள்ளை ச. இல. 235]

தமிழ்ப் புலவர்களுட் தலை சிறந்து விளங்கும் ஔவையார் அருளிச்செய்த நூல்களுள் ஆத்திசூடியும் ஒன்றாகும். ஆத்திசூடியிலேயே யான் எழுத எடுத்துக்கொண்ட இவ்விடயம் கூறப்பட்டுள்ளது. "தந்தை தாய் பேண்", என்பதன் பொருள் பிதாவையும் மாதாவையும் எப்போதும் காப்பாற்று என்பதாம். தாயும் தகப்பனும் ஐங்குரவருள் முதன்மையாக மதிக்கப்படுகின்றார்கள். தாயானவள் பத்துமாதமும் சுமந்து வருத்தப்பட்டு நம்மைப் பெற்றெடுக்கிறாள். பின்னர் பாலூட்டித் தாலாட்டி வளர்க்கின்றாள், நாம் நோய் வாய்ப்படும் நேரத்தில் அரிய மருந்துகளை வாங்கித்தந்து தானுமுண்டு பத்தியமிருந்து காப்பாற்றுகிறாள். பள்ளிப்பிராயம் வந்ததும் நமக்கு இனிய உணவுகளைத் தேடித்தந்து அலங்காரஞ் செய்து பாடசாலைக்கனுப்புகிறாள். இவ்விதம் தாயானவள் நமக்காகச் செய்யும் முயற்சிகள் அளவிடற்கரியன. நம்மைப் பெற்ற தந்தையானவர் உணவு உடை முதலியவற்றைக் குறைவின்றித் தேடித்தருகின்றார். நோய் வந்தகாலத்து அரிய வைத்தியர்களைக் கொண்டு வைத்தியம் செய்விக்கிறார். நாம் படிப்பதற்கு வேண்டிய புத்தகங்களையெல்லாம் வாங்கித்தந்து பாடசாலைக்கனுப்பி நமது அறிவை விருத்திபண்ணி வைக்கிறார். அல்லும் பகலும் நமது நன்மைக்காக உழைத்துவரும் தாய் தந்தையரை நாம் தெய்வங்களாக மதிக்கவேண்டும். இக்கருத்துப்பற்றியே ஔவையாரும் தமது கொன்றை வேந்தனில் "அன்னையும் 'பிதாவும் முன்னறி தெய்வம்" என்று கூறியுள்ளார். தாய்தந்தையர் சொல்லும் வேலைகளையெல்லாம் நாம் தட்டாது செய்தல் வேண்டும். அவர்கள் விருப்பத்திற்கு மாறாக நாம் எத்தொழிலையும் செய்தலாகாது. தந்தையினுடைய சொல்லிலும் பார்க்க மேம்பட்ட மந்திரம் எந்த நூலிலும் இல்லையென்று அறிஞர்கள் கருதுகிறார்கள். இக்கருத்தினைக் கொண்டே ஔவையாரும் "தந்தை சொன் மிக்க மந்திரமில்லை" என்று கூறியிருக்கின்றார். நாம் அறிவிற்குரிய நூல்களை நன்றாகப் படித்து அறிவை விருத்தி செய்து நற்குண நற்செய்கைகளை உடையவர்களாக விளங்குதல்வேண்டும். காண்பவர்கள் இவனுடைய தந்தை இவனைப் பெறுவதற்கு என்ன தவம் செய்தானோ என்று சொல்லத்தக்க விதமாக நடத்தல்வேண்டும். திருவள்ளுவரும் "மகன்றந்தைக், காற்றுமுதவி யிவன்றந்தை என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்" என்று தமதரிய திருக்குறளிற் கூறியுள்ளார். நாம் நன்கு படித்து அறிவாளர்களாகி பெரிய சபைகளிலே நடமாடும்பொழுது சபையிலுள்ளவர்கள் இவனைச் சான்றோனென்று பேசுவார்களானால் அதனைக் கேட்ட நமது தாய் நம்மைப் பெற்றபொழுதிலும் பார்க்க அதிக மகிழ்ச்சியடைவாள். "ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்" என்னும் திருக்குறளை நன்கு சிந்தித்துப் பாருங்கள். தந்தை தாயர் வயோதிபரான காலத்து அவர்களுக்கு வேண்டிய உணவு உடை முதலியவற்றையெல்லாம் நேரத்துக்கு நேரம் கொடுத்தல்வேண்டும். அவர்களுக்கு ஏதாவது நோய் வந்தால் தக்க வைத்தியரிடம் மருந்து வாங்கிக் கொடுத்து அந்நோயை நீக்க முயலல் வேண்டும். இவ்விதம் செய்யாவிட்டால் பெரும் பாவிகளாவோம். சில அறிவீனர்கள் தாய் தந்தையர் உணவின்றி நோய்வாய்ப்பட்டு அலைந்து திரிவதைக் கவனியாது விசேட தலங்களுக்கு யாத்திரை செய்து அங்கே பெரிய தானங்களையெல்லாம் செய்கிறார்கள். இப்படிச் செய்வதனாலொரு பிரயோசனமில்லை. "பெற்றதாய் கிண்ணிப் பிச்சையெடுக்க தம்பி கும்பகோணத்தில் கோதானம் பண்ணுகிறான்" என்ற முதுமொழிக் கிலக்காக விளங்கும் இவ்வறிவிலிகள் "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை" யென்னும் ஔவையாரின் திருவாக்கை நன்கு சிந்திப்பார்களாக தந்ததாயர்கள். உயிரோடிருக்கின்ற காலத்தில் அவர்களுக்கு உணவு உடை முதலியவற்றில் அற்பமேனும் உதவி செய்யாத சில பாவிகள் அவர்களிறந்தவுடன் எவ்வளவோ பணத்தைச் செலவழிக்கிறார்கள். பிணத்தை மிகவும் ஆடம்பரமாகக் கொண்டுசென்று சந்திகள்தோறும் நிறுத்தி நிறுத்தி அதிக பறையர்களைக் கொண்டு பறையடிப்பிக்கிறார்கள். இவ்வித செய்கையால் இறந்தவர்க்கு அற்பமேனும் சுகங் கிடையாது. உலகத்திலுள்ளவர்கள் தம்மைப் புகழுவார்களென்றே இவ்விதம் செய்கிறார்கள். இப்பாவிகள் இம்மையிற் பெரியோரால் வெறுக்கப்பட்டு மறுமையில் அளவில்லாத காலம் நரகத் துன்பத்தை அனுபவிப்பர். ஆகையால் நாமெல்லோரும் நமது தாய் தந்தையரை அவர்கள் உயிரோடிருக்கும் காலத்தில் தக்க விதமாகப் பேணுதல்வேண்டும். அவர்களிறந்தபின் கிரியைகளை விதிப்படி செய்வித்தல்வேண்டும்.

இவ்விதம் செய்தோமானால் இம்மையின்பத்தையும் மறுமையின்பத்தையும் அடைவோம் என்பது திண்ணம்.

விசாகப்பெருமாளையரவர்கள்

இயற்றிய

அணியிலக்கணம்

(திருத்தமான பதிப்பு)

விலை சதம் 35.

புன்னகையின் வசீகரம்

கோபத்தை வெல்லுஞ் சிரிப்பு

எங்கே பார்க்கலாம் ஒரு சிரிப்புப்போடுங்கள்! ஹா...ஹா... போதும், போதும். எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தீர்களா?

எத்தனையோ குழந்தைகள் சிரித்தபடியிருக்கிறார்கள். அந்தப் புன்னகையின் எழில் நிறைந்த வதனங்களை எப்போதுமோ பார்த்துக்கொண்டிருந்தால் சாப்பாடே தேவையில்லை.

ஒருவரின் உள்ளத்திலிருக்கும் உவகைதான் முகத்தில் நகையாகப் பிரதிபலிக்கிறது. "அகத்தி னழகு முகத்தில் தெரியும்" என்ற பழமொழியைக் கேட்டிருக்கிறீர்களல்லவா?

ஒரு பெரிய விஞ்ஞான சாத்திர நிபுணரின் ஆராய்ச்சியாற் கண்டபடி மனிதரின் முகத்தில் 64-தசைநார்கள் உண்டு. இத் தசைநார்கள் எப்போதாவது முக வேறுபாடு கொள்ளவேண்டுமானால் உடனே வேலைசெய்யத் தொடங்குகின்றன.

துக்கம், கோபம், மகிழ்ச்சி, பரிதாபம்—இவ்வையெல்லாம் இலகுவாகத் தோன்றி விடுகின்றன.

மிகவும் விநோதமான ஒரு சங்கதி யென்னவென்று பாருங்கள்; கோபக்குறி காட்டவேண்டுமானால் 50 தசைநார்கள் வேலைசெய்ய வேண்டுமாம். ஆனால் ஒரு சிரிப்பு வேண்டுமானால் 13 தசைநார் சேர்ந்தால் போதுமாம்! பாருங்கள் சிரிப்பது எவ்வளவு சுலபமானதென்று! ஆகையால், ஏன் கோபிக்கிறீர்கள்?

போட்டோ பிடிக்கும் ஒருவன் சொல்வதென்ன தெரியுமா? "எங்கே, ஒரு சிறிய புன்னகை!" என்றுதான் எச்சரிக்கை செய்கிறான். ஏனெனில் ஒருவரின் முகவிலாசத்தை ஒரு புன்னகை பிரகாசிக்கச் செய்துவிடுகிறது.

மிகமிக விநோதமான சக்தியொன்று புன்னகைக்குண்டு. இது தான் எத்தகைய கோபத்தையும் பறக்கச் செய்து விடுஞ் சக்தி. அடுத்த முறை அப்பா, அல்லது அம்மா, கோபிக்கும்போது வேண்டுமானால் நீங்களே நேரில் பரீக்ஷித்துப் பாருங்கள்?

விண்ணப்பப் பத்திரம்

அன்பார்ந்த தாத்தா! திகதி............................

தயவுசெய்து "ஈழகேசரி இளைஞர் சங்கத்"தில் என்னை ஒரு அங்கத்தவராகப் பதிவுசெய்து கொள்ளுங்கள். இத்துடன் 12 சத முத்திரை ஆறுமாத சந்தாப்பணமாக அனுப்பியிருக்கிறேன். [இந்தியா 2 அணா; மலாயா 16 காசு.]

பெயர்...

பிறந்த திகதி...................மாதம்.....................வருடம்.......................

விலாசம்...

....

பெற்றோர், அல்லது உபாத்தியாயர் கையொப்பம் ....

இந்த விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி 'தாத்தா' c/o 'ஈழகேசரி', சுன்னாகம், இலங்கை என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

[குறிப்பு : இளைஞர்சங்கத்தில் சேர விரும்புவோர் தமது விண்ணப்பப் பத்திரத்தை அச்சுக்கூபனிலேயே நிரப்பியனுப்பவேண்டும். வெறுங் காகிதத்தில் எழுதப்படுவன கவனிக்கப்படா. சந்தா புதுப்பிப்பவர்களுக்கு இந்த நிபந்தனை கிடையாது]

சுத்தவித்தை யெழுதலாத் தோன்றுமோர் ஐந்துவகைத், தத்துவத்தை நீங்கிஅருள் சாருநாள் எந்நாளோ.

ஈழகேசரி இளைஞர் சங்கம்

அருமைக் குழந்தைகாள்!

வசந்தகாலம் ஆரம்பித்து விட்டதல்லவா! மாலை வேளைகளில் மனோகரமான காற்று வீசுகிறது. நாங்கள் சோழகம் என்று சொல்கிறோம் எந்தத் தென்றற் காற்றை. பாடசாலைகளில் மாலைப்பாடங்கள் முடிந்ததும் நீங்கள் என்ன செய்கிறீர்கள்! புத்தகங்களை யெல்லாம் கொண்டுபோய் வீட்டில் பக்குவமாய் வைத்துவிட்டு விளையாடப் போவதில்லையா! அதுதான் சரியானவேலை. நாள் முழுதும் படிக்க வேண்டாம். பாடசாலை வேலை முடிந்தால் மாலையில் உடற் பயிற்சி செய்யவேண்டும்; அப்புறம் இரவு ஆறரை அல்லது ஏழுமணிக்குத்தான் படிக்க ஆரம்பிக்க வேண்டும்.

உடற் பயிற்சிக்கு எத்தனையோ விளையாட்டுக்களெல்லாம் நமது தமிழ் நாட்டிலுண்டல்லவா? டிறில், கிறிக்கெட் போன்ற இங்கிலீஷ் விளையாட்டுகளை தமிழ்க் குழந்தைகளாகிய நீங்கள் விளையாடுவதென்றால் தாத்தாவுக்குப் பிடிக்காது. தமிழர் விளையாடின விளையாட்டைத்தான் நீங்களும் பின்பற்றவேண்டும். எத்தனை பேர் 'கிளித்தட்டு' என்ற விளையாட்டில் தீரர்களாயிருக்கிறீர்கள்? கிட்டியடித்து விளையாடுகிறீர்களா? பாண்டி வெட்டத் தெரியுமா? இப்படியாக நாட்டுப்புறங்களில் அனேகம் விளையாட்டுகளுண்டு. அவையெல்லாம் சரீரத்துக்கு மிகவும் உறுதியைக் கொடுப்பன.

நல்ல சோழகம் வீசுமிக்காலந்தான் பட்டங்கள் கட்டி ஆகாயத்தில் பறக்கவிடும் விநோத விளையாட்டுக்கு உகந்தது. கொக்கு, பிராந்து, பாம்பு, பெட்டி எட்டுமூலை—என்று எத்தனையோ விதமான பட்டங்கள் இந்த நாளில் கட்டி ஏற்றுகின்றனர். உங்களில் எத்தனைபேர் இந்த நூதன வித்தை தெரிந்தவர்கள்? என்னவோ, என் காலத்தில் ஆள்மாதிரிக்கூடப் பட்டங்கட்டி ஏற்றியிருக்கிறார்கள். இதெல்லாம் இப்போது காணக்கிடைக்கவில்லை.

பெண்பிள்ளைகள்தான் ரொம்பவும் அழகான விளையாட்டுக்களில் ஈடுபடலாம். மாங்கொட்டை போடுதல், கொக்கான் வெட்டுதல்—ஏன் வீணை மீட்டல், பிடில் வாசித்தல், பாட்டுப் பாடுதல் — இவையெல்லாம் விளையாட்டுக்கள்தானே!

இப்படியாக மூளைக்கு ஆறுதலைத் தரும் பொழுதுபோக்கான விளையாட்டுக்களில் ஓய்வுநேரத்தைப் பயன்படுத்தினால் நல்ல பிள்ளைகளாக வரலாம்.

* * *

பிள்ளைகளுக்கெல்லாம் மிகவும் ரஸமான ஒரு போட்டி ஆரம்பிக்கலாமென்று நானும் பாட்டியும் இப்பொழுது ஒரு வாரமாக ஆலோசித்துப் பார்த்தோம். இன்னும் ஒரு முடிவுக்கு வந்தபாடில்லை! போட்டியென்றால் வெறும் போட்டியாயிருக்கக்கூடாது. மூளைக்கு வேலை கொடுக்கவேண்டும். இதைப்பற்றிய முடிவு அடுத்தடுத்த வாரங்களில் வெளியிடுவேன். —தாத்தா.

தாத்தா பதில்

க. சண்முகம் (223), ஊழது வாழ்த்து வெண்பாவும் வேறு பல கட்டுரைகளும் இடம் போதாமையால் நிறுத்தப்படலாயின. இந்த விஷயங்களெல்லாம் கல்வி அனுபந்தங்களில் பிரசுரிக்கப்பட்டு வெளி வருமென்று தெரிந்துகொள்ளவும். உமது இரண்டொரு கடிதங்கள் இப்பொழுதுதான் என்கைக்கெட்டின.

சி. அரசரெத்தினம் (180), உமக்கு என்மேல் என் இவ்வளவு கோபமோ தெரியவில்லை! பாட்டியின்மேல்தான் ரகஸ்யமாக அன்பு வைத்திருக்கிறீர்போலத் தெரிகிறது! பரவாயில்லை. ஆனால் ஆத்திரப்படாமல் இருக்கவேண்டும். எத்தனை பேருக்கென்று நான் ஒரே தடவையில் மறுமொழி சொல்ல முடியும். கொஞ்சம் பொறுத்திருந்தால் ஆகாதா? போட்டி விஷயத்தில் ஒன்றும் எழுதிதலாகாது. அதெல்லாம் மந்திரி யஸ்தர் தீர்ப்பு. எனக்கொன்றுந் தெரியாது! உமது கட்டுரைகள் பிரசுரத்துக்கு அவ்வளவு திறமையுள்ளதாயில்லாததால் நிறுத்தப்பட்டிருக்கின்றன. வேண்டுமானால் வந்து பெற்றுக்கொள்ளவும். அல்லது 6 சத முத்திரையொட்டிய விலாசமிட்ட கவர் தேவை.

ம. க. நடராசா தம்பி, நான் தப்புத்தான். உமது கட்டுரை என் வசமிருந்தது. தவறுதலாக எங்கோ மறைந்து கிடந்துவிட்டது. தெரியாதா வயோதிப காலத்தில்! இப்பொழுதுதான் பழைய கட்டுக்களை யெடுத்துப் பார்த்ததில் உமது கட்டுரையுங் கிடைத்தது. அடுத்தவாரம் பிரசுரிக்கப்படும். இதற்காகப் பாட்டிகூடக் கோபித்துக்கொண்டாள். ஓகோ! நீர் என்னைப் பார்த்துவிட்டீர்போல்தான் தெரிகிறது! ஆனால் இரகஸ்யமாயிருக்கட்டும். பத்திரம்!

சே. சிவனடியான் (249), என்ன செய்வது தம்பி, நான் உம்மேல் அனுதாபப்படத்தான் வேண்டியிருக்கிறது. உமது கட்டுரையோ மிகவும் நன்றாயிருக்கிறது. ஆனால் கொஞ்சம் வயது சென்றவர்கள் எழுதவேண்டிய விஷயம்! உமக்கு இது கூடிப்போயிற்று! அன்றியும் சிறுவர்க்கான கல்வியனுபந்தத்தில் பிரசுரிப்பதும் நன்றாயில்லை. உமது சுவையுணர்ச்சி நல்லதுதான். அதையுபயோகித்து மாணவர்க்கான தேதாவது எழுதலாகாதா?

அ. ஜயேந்திரன், கல்விமலர் கிடைத்ததா என்பதைத் தெரியப்படுத்தவேண்டும். சீக்கிரம்.

புதிய அங்கத்தவர் (முற்றொடர்)

264. வ. சிவபாலசிங்கம்
265. த. சிமியோன் இம்மனுவேல்
266. வி. தெய்வசிகாமணி

ஈழகேசரி கல்வி அனுபந்தம்
தனிப்பிரதி விலை சதம் — 3
25 பிரதிகள் விலை சதம் — **50**
தபாற் செலவு வேறு
ஆண்டுச் சந்தா ரூபா **2**.
முற்பணமின்றி அனுப்பப்படமாட்டாது.

யாழ்ப்பாணம்-மயிலிட்டி தெற்கு "திருமகள்நிலைய" த்தி லிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டியி' லுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1939-ம் ஞூ ஜூன்மீ 4உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.